351

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

செயலக வெளியீடு

மார்ச் 19, 1999 தொகுதி ௬௫
எண் ௨

D
V211,31'N99
N99.65.19.2
221071

வெளியீடு 11-1-2000 Issued 11-1-2000

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**வெள்ளிக்கிழமை, மார்ச் 19, 1999 - தொகுதி 65 - எண் 2**

**Friday, 19th March, 1999—Volume 65 - No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Fort St. George,**
**Chennai - 600 009**

விலை ரூ. *3.00*] [Price Rs. 3.00

**19-3-1999**

## உள்ளடக்கம்


*பக்கங்கள்*

*1.* இரங்கல் தீர்மானம்—

| | |
|---|---|
| உறுப்பினர் டாக்டர் வே. ஆல்பன் மறைவு .. | 47-64 |
| *மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் .. | 47-48<br>60-64 |
| டாக்டர் எம். மோசஸ் .. .. .. | 48-49 |
| திரு. ஜி. பழனிசாமி .. .. .. | 49-50 |
| திரு. ம. அப்துல் லத்தீப் .. .. .. | 50-51 |
| திரு. இரா. தாமரைக்கனி .. .. .. | 51-54 |
| திரு. ஐ. கணேசன் .. .. .. | 54 |
| *திரு. லா. சந்தானம் .. .. .. | 55 |
| திரு. எஸ். திருநாவுக்கரசு .. .. .. | 56 |
| *திரு. டி. மணி .. .. .. | 56-58 |
| திரு. பி. வெங்கடசாமி .. .. .. | 58-59 |
| *டாக்டர் க. கிருஷ்ணசாமி .. .. .. | 59-60 |
| திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் .. | 60 |

*2.* பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— 64-66

2,21,071.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## பங்குனி 5, வெகுதான்ய - திருவள்ளுவர் ஆண்டு 2030

## 1999 மார்ச் 19, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை *9-30* மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"உறங்கு வதுபோலும் சாக்காடு உறங்கி*
*விழிப்பது போலும் பிறப்பு"*

நிலையற்ற வாழ்க்கையில், உறக்கத்திற்குப் பிறகு விழிப்பதைப் போன்றது பிறப்பு; திரும்ப விழிக்க முடியாத மீளா உறக்கம் கொள்வதே இறப்பு.

### 1. இரங்கல் தீர்மானம்

#### உறுப்பினர் டாக்டர் வே. ஆல்பன் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நம்முடைய பேரவை உறுப்பினர், குமரி மாவட்டம், திருவட்டாறு தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட, டாக்டர் வே. ஆல்பன் அவர்கள் நேற்றையதினம் மரணமடைந்தார்கள் என்ற செய்தியை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அது குறித்த இரங்கல் தீர்மானத்தைப் பேரவை முன்னவர் அவர்கள் முன்மொழிவார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் பேசிய பிறகு, பேரவை முன்னவர் அவர்கள் இறுதியாகப் பேசுவார்கள் என்று அறிவிக்கிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"*1996* ஆம் ஆண்டு கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு தொகுதியிலிருந்து இப்பேரவைக்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரும், இனிய பண்பும், செயல்திறனும் கொண்டவருமான டாக்டர் வே. ஆல்பன் அவர்கள் *18-3-1999* அன்று

திடீரென மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை மிகவும் வருந்துகிறது. அன்னாரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது."

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் எம். மோசஸ்.

**டாக்டர் எம். மோசஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்மையெல்லாம் மீளாத் துயரில் விட்டுச்சென்ற அருமை தம்பி டாக்டர் ஆல்பன் அவர்கள் எனக்கு மிகவும் நெருக்கமானவர். உடன்பிறவாச் சகோதரர் போல என்னோடு பழகியவர். அவருடைய குடும்பத்தினர் ஒவ்வொருவரையும் எனக்கு மிகவும் நன்றாகத் தெரியும். அவருடைய தாயார் ஆற்றூர் செல்லம்மை, எங்களுடைய மாவட்டத்திலே அந்தக் காலத்திலிருந்தே வர்ம சிகிச்சை அளிப்பதில் மிகவும் புகழ்பெற்றவர். டாக்டர் ஆல்பன் அவர்கள் கல்லூரியில் மாணவராக இருக்கும்போதே திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் மற்றும் அக்கட்சியின்பால் மிகுந்த பற்றும், பாசமும் கொண்டவராக இருந்து, தீவிரமாகச் செயல்பட்டுக் கொண்டிருந்தார். அவருடைய திறமை கண்டு 1976-ல் நானே அவரிடம் சென்று 'தம்பி நீ எங்களோடு காங்கிரசில் வந்து இணைந்துவிடு' என்று மிகவும் வற்புறுத்தினேன். அதற்கு அவர் 'அண்ணே, எனக்கு இது மிகவும் பிடித்தமான கட்சி, நான் இதிலேயே இருந்துகொள்கிறேன். நீங்கள் அப்படியே இருங்கள்' என்று சொன்னார். கட்சி எதுவாக இருந்தாலும் பொதுப் பிரச்சினை என்றால், அது எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் சரி, என்னோடு தோளோடு தோள் நின்று எல்லாப் பிரச்சினைகளிலும் மிகவும் ஆர்வமாகவும், ஊக்கமாகவும் எனக்கு ஒரு நல்ல சகோதரனாக இருந்து செயல்பட்டு வந்தார். மிசாவில் கைது செய்யப்பட்டார். ஆற்றூர் பேரூராட்சித் தலைவராகவும், திருவட்டாறு யூனியன் தலைவராகவும் செயலாற்றினார். தொடர்ந்து இரண்டாவது முறையாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாவட்டச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றார். சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். அவரிடம் பல நல்ல குணங்களைப் பார்க்கலாம். அவரிடம் ஒரு சிறந்த பண்பு - அவரது மருத்துவமனையில் நோயாளிகள் வந்தால் கொடுத்ததை வாங்கிக்கொண்டு சிகிச்சை அளிப்பார். எந்த நோயாளியிடமும் நீ இவ்வளவு கொடுத்தால்தான் சிகிச்சை என்று அவர் சொன்னதில்லை. நல்ல முறையிலே பெயரோடும், புகழோடும்



அவர் செயல்பட்டுக் கொண்டிருந்தார். அது மட்டுமல்ல, நாகர் கோவில் நகருக்குப் பேச்சிப்பாறையிலிருந்து குடிநீர் எடுக்கக் கூடாது என்று எல்லோரும் எதிர்த்து நின்ற சமயத்தில் என்னோடு சேர்ந்து, எடுக்கத்தான் வேண்டும் என்று குரல் கொடுத்த ஒரே தம்பி, என்னுடைய அருமைத்தம்பி டாக்டர் ஆல்பன். அதையெல்லாம் என்னால் மறக்கவே முடியாது.

அதுமட்டுமல்ல, தென்னிந்திய திருச்சபை அமைப்புத் தேர்தல்களில் என்னோடு பலமுறை சேர்ந்து நின்றிருக்கிறார். நாங்கள் பலமுறை வெற்றி கண்டிருக்கிறோம். 1989-லும், 1992-லும் மார்த்தாண்டம் நேசமணி கல்லூரியின் தாளாளராக இருந்து மிகவும் சிறப்பாகட பணியாற்றினார். அப்படிப்பட்ட நல்லவரை இழந்து அவருடைய மனைவி மக்கள் தவிக்கிறார்கள். அவருடைய இரண்டு பிள்ளைகளும் மருத்துவக் கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இன்னும் கல்வி முடியவில்லை. அந்த இளம் வயதிலேயே டாக்டர் ஆல்பன், அவர்களை விட்டுப்போனது அவருடைய குடும்பத்திற்கு தாங்க முடியாத இழப்பு. நம் எல்லோருக்கும்கூட இது பெரிய இழப்பு. எல்லாம்வல்ல இறைவன் அன்னாருடைய குடும்பத்தினருக்கும், உற்றார் உறவினருக்கும் ஆறுதலைக் கொடுக்க வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறேன்.

முற்பகல் 9-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது சக சட்டமன்ற உறுப்பினர் திருவட்டாறு தொகுதியினுடைய உறுப்பினர், டாக்டர் ஆல்பன் அவர்களுடைய மறைவு ஒரு துயரமான நிகழ்ச்சி. நேற்றைக்கு முன்தினம் வரை நம்மோடு இருந்து, மக்களுக்காக, நாட்டுக்காக, பணி செய்வதற்கு நம்மோடு கலந்து கொண்டவர். இன்று அவர் இல்லாத நிலையைப் பார்க்கும்போது மிகவும் வேதனையாக இருக்கிறது. அதோடுமட்டுமல்ல, சமீப காலங்களில் அவர் சட்டப் பேரவை உறுப்பினரான பின்னால், அவரும் நானும் பக்கத்து பக்கத்து அறைகளில் தங்கியிருந்த காரணத்தினால், அடுத்தவர்களிடத்திலேகூட சத்தமாகப் பேசிப் பார்க்க முடியாத அளவிற்கு அவரது அமைதியான குணங்களைப் பார்த்திருக்கிறேன். பொதுவாக அவருடைய வாழ்க்கை வரலாற்றைப் படிக்கிறபோது அவர் ஒரு மருத்துவக் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பது தெரியும். அவர் மட்டுமல்ல, அவருடைய மனைவி, அவருடைய குழந்தைகள் அத்தனை பேரும் மருத்துவக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்.

[திரு. ஜி. பழனிசாமி] [1999 மார்ச் 19

அதிலேயும், திராவிட முன்னேற்றக் கழக இயக்கத்திலே தன்னை இணைத்து, ஒரு சமூகப் பணிக்காக, தேசப் பணிக்காக, தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டிருந்த டாக்டர் ஆல்பன் அவர்களுடைய எதிர்பாராத இந்த இறப்பு நமக்கு பெரும் அதிர்ச்சியையும், ஆழ்ந்த கவலையையும், இந்த நேரத்திலே ஏற்படுத்தியிருக்கிறது. அது அன்னாருடைய குடும்பத்திற்கும், அவர் சார்ந்திருககிற திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், நமது சட்டப் பேரவைக்கும் பேரிழப்பாக இருக்கிறது என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பாகச் சொல்லி, எனது ஆழ்ந்த அனுதாபத்தையும், ஆறுதலையும் அவரது குடும்பத்திற்குக் கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவட்டாறு தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெற்று இதுகாறும், நேற்று முன்தினம் வரையில், நம்மோடு இருந்து சிறப்புற பணியாற்றிக் கொண்டிருந்த டாக்டர் ஆல்பன் அவர்கள் இன்றைக்கு இல்லை என்ற நிலைக்கு ஆளாக்கப்பட்டிருப்பது என்பது நமக்கெல்லாம் பெரும் துயரை ஏற்படுத்தியிருககிறது. இங்கே சுட்டிக்காட்டியிருப்பதைப்போல அவர் மிகவும் அமைதியானவர், அடக்கமானவா; ஆனால் செயல்திறன் மிக்கவர். அந்தத் தொகுதியினுடைய சட்டப் பேரவை உறுப்பினராக மட்டுமல்லாமல், தான் சார்ந்துள்ள கட்சியினுடைய மாவட்டச் செயலாளராகவும் அவர்கள் செயலாற்றிய முறை எல்லோரையும் கவர்ந்து வநதது. டாக்டர் என்ற முறையிலே அவர்கள் எப்படிப் பணியாற்றினார்கள் என்பதை மாண்புமிகு மோசஸ் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். எல்லா மக்களிடத்திலேயும் இனிமையாகப் பழகி, இன்முகம் காட்டி, மனித சமுதாயத்தினுடைய இன்னலைத் தீர்க்க அவர், தன்னுடைய படிப்பை, தான் பெற்ற அனுபவத்தை, எவ்வளவு பக்குவமாகப் பயன்படுத்தினார் என்பதை நாம் கேட்டு மகிழ்கிற அதே நேரத்தில் அப்பேர்ப்பட்ட ஒரு நல்லவர் இன்றைக்கு நம்மிடத்தில் இல்லையே என்ற ஏக்கம் நம்முடைய உள்ளத்தில் விஞ்சி நிற்கிறது.

நேற்றையதினம் இராமச்சந்திரா மருத்துவமனையில் அவருடைய குமாரனைப் பார்த்தேன். முதலாம் ஆண்டு மருத்துவப் படிப்பிலே படித்துக் கொண்டிருக்கிறார். அவருடைய மகளும் அதே துறையிலே கல்வி பயின்று கொண்டிருப்பதாகக் கேள்விப்பட்டேன். ஒரு பாரம்பரியமான குடும்பம். மிசா போன்ற கொடுமையை அனுபவித்தும்,



1999 மார்ச் 19] [திரு. ம. அப்துல் லத்தீப்]

கொள்கை மாறாத ஒரு நல்ல கொள்கைக் கோமானாக அவர் திகழ்ந்தார். அவருடைய மறைவுக்காக நாங்கள் வருந்துகிறோம்; இந்தச் சபை வருந்துகிறது. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்திலே நாங்கள் மிகத் துயரத்தோடு பங்குகொள்கிறோம். அவரை இழந்து வாடுகிற அவருடைய குடும்பத்தாருக்கு என்னுடைய ஆழந்த இரங்கலைத் தெரிவிப்பதோடு, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் முதல்வர் கலைஞர் அவர்களுக்கும், இனமான பேராசிரியர் அவர்களுக்கும், அந்தக் கட்சிக்கும், இந்திய தேசிய லீக்கின் சார்பாக ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொண்டு, அந்த நல்லவருடைய ஆன்மா சாந்தியடைய எல்லாம்வல்ல திருவருள் அருள்பாலிக்க வேண்டுமென்று பிரார்த்தித்து விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

முற்பகல் 9-40

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்றத்தில் நான்கு சட்டமன்ற உறுப்பினர்களை நாம் இழந்திருக்கின்றோம். அருமை அண்ணன் தங்கபாண்டியன், குன்னூர் தங்கவேலு, புதுக்கோட்டை பெரியண்ணன், டாக்டர் ஆல்பன் ஆகியோரை நாம் இழந்திருக்கின்றோம். இவர் சக சட்டமன்ற உறுப்பினராக இருந்து, பொது மக்களுக்காகப் பணியாற்றும்போது, சட்டமன்றக் கூட்டத்தொடரில் பணியாற்றுகிறபோது இறந்திருப்பது நமக்கெல்லாம் மிகவும் வேதனைத் தருகிறது. அவரை இழந்து தவிக்கும் அந்தக் குடும்பத்தாருக்கும், அவருடைய கட்சிக்கும் எங்களுடைய இயக்கத்தின் சார்பில் ஆழ்ந்த இரங்கலை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் ஆல்பன் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆரம்பகால உறுப்பினராக இருந்து, கிளைக் கழகச் செயலாளராக இருந்து, பின்பு தொகுதியில் பொறுப்பாளராக இருந்து, பின்பு மாவட்டச் செயலாளராக இருந்து, பின்பு சட்டமன்ற உறுப்பினராக இருந்து, படிப்படியாக உயர்ந்திருக்கின்றார். மாணவப் பருவத்திலேயே திராவிட இயக்கத்தினுடைய மாணவர் பிரிவுத் தலைவராக இருந்து, அவர் சார்ந்த அந்த இயக்கத்திற்காக பணி ஆற்றியிருக்கின்றார். பல போராட்டங்களில் ஈடுபட்டு, பணியாற்றி, சட்டமன்ற உறுப்பினராக இருந்து அந்தப் பகுதியிலுள்ள மக்களுக்குப் பணியாற்றியிருக்கின்றார்.

2,21,071

சில சட்டமன்ற உறுப்பினர்கள் பெயரைச் சொன்னாலே, 'எங்கள் தொகுதி எம்.எல்.ஏ. இல்லையப்பா அவர்' என்று சொல்வார்கள். ஆனால், திருவட்டாறு தொகுதி எம்.எல்.ஏ. ஆல்பன் என்று சொன்னால், 'எங்கள் ஊர் எம்.எல்.ஏ., எங்கள் ஊர் எம்.எல்.ஏ.,' என்று சொல்கிற அளவுக்கு அந்த மாவட்டத்திலுள்ள, அந்தப் பகுதியிலுள்ள மக்கள் எல்லாம் அவர்மீது பற்றும், பாசமும் மிக்கவர்களாக இருந்திருக்கின்றார்கள். அவருடைய கட்சிக்காரர்களும் அவர்மீது பாசமாக இருந்திருக்கின்றார்கள். அவர் எல்லோரிடமும் இனிமையாகப் பழகக்கூடியவர். ஆர்ப்பாட்டம் இல்லாத ஒரு பொது நலத் தொண்டர். அப்படிப்பட்டவரை இழந்த இந்த நேரத்தில் அவர் மறைவுக்கு நாம் எவ்வளவுதான் அனுதாபம் சொன்னாலும் அது ஈடுசெய்ய முடியாதது.

இன்னொன்று, டாக்டர் ஆல்பன் அவர்கள் இறந்ததுபற்றி எனக்கெல்லாம்—நான் சட்டமன்ற உறுப்பினராக சட்டமன்ற உறுப்பினர் விடுதியிலே இருந்தாலும், ரொம்ப நேரம் கழித்துதான் தெரிந்தது. அதற்குள் அவரை கன்னியாகுமரிக்குக் கொண்டுபோகப் போகிறதாகவும், டி.வி. மூலமாகவும, மற்ற சக உறுப்பினர்கள் சொன்னதை கேட்டுதான் தெரிந்துகொண்டோம். அரசியல் கட்சிகள், பல கட்சிகளாக இருந்தாலும், நாம் எல்லாம் சட்டமன்ற உறுபபினர்கள் என்ற உணர்வு, மனிதநேயம் வர வேண்டும். ஆகவே, இப்படி பணியாற்ற வரும்போது, ஒரு சடடமன்ற உறுப்பினர் இறந்திருக்கும்போது, எனக்கெல்லாம் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே, நம்மைப்போன்ற சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே இரத்தம் எல்லாம் துடியாகத் துடிக்கிறது. ஆகவே, கட்சி சார்பிலே இல்லாவிட்டாலும், உங்கள் கட்சி சார்பிலே இல்லாவிட்டாலும், சட்டமன்றச் செயலகத்தின் மூலமாகவாவது இப்படி இந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் இறந்துவிட்டார் என்று சொன்னால், எல்லாக் கட்சிகள் சார்பிலேயும் சட்டமன்ற உறுப்பினர்கள் வந்து இரங்கல் சொல்வதற்கு ஏதுவாக அமையும். இனிமேலாவது சட்டமன்றச் செயலகம் இத்தகைய நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

சட்டமன்ற உறுப்பினர் ஆல்பன் அவர்களுக்கு ஏற்கெனவே இரண்டு தடவை heart attack வந்திருக்கிறது. இது மூன்றாவது தடவை என்று சொல்கிறார்கள். ஆகவே, எவ்வளவுதான் நமக்கு சட்டமன்ற உறுப்பினர் என்ற அந்தஸ்து, பதவி இருந்தாலும், அந்தப் பகுதியில் உள்ள இரண்டு இலட்சம் மக்களுடைய பிரதிநிதி என்ற முறையில், அரசாங்க சொத்தாக நாம் எல்லாம் மாறுகிறோம், பொதுமக்களுக்காக சேவைச் செய்ய





வருகிறோம். அதனால், சட்டமன்ற உறுப்பினர் என்ற பதவி ஏற்கும்போதே, அந்தச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்னென்ன வியாதிகள் இருக்கின்றன என்று அறிந்து சட்டமன்றப் பேரவைக்கு பணிபுரிய வரும்போது, டாக்டர்கள் அடிக்கடி வந்து test பண்ணி, மருத்துவ சிகிச்சை கொடுத்தால் நன்றாக இருக்கும்.

இப்போது சட்டமன்ற உறுப்பினர்களுக்கென்று, சட்டமன்ற விடுதி வளாகத்திலே ஒரு ஆஸ்பத்திரி இருக்கிறது. அது முதல் சிகிச்சைக்குக்கூட லாயக்கில்லாத ஒரு ஆஸ்பத்திரியாக இருக்கிறது. ஆகவே, சட்டமன்றக் கூட்டம் நடக்கிறபோது சகல வசதிகளும் இருக்கக்கூடிய ஒரு மருத்துவமனையாக இருந்தால், திடீரென்று சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வியாதி வரும்போது, சட்டமன்ற உறுப்பினர் விடுதி வளாகத்தில் உள்ள அந்த ஆஸ்பத்திரியிலேயே அவர்களை காப்பாற்றக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கும். முதல் சிகிச்சை பெறுவதற்கு வேண்டிய வசதிகள் அந்த ஆஸ்பத்திரியிலேயே இருந்திருந்தால் டாக்டர் ஆல்பன் உயிரைக்கூட காப்பாற்றி இருக்கலாம்.

இப்படித் தீர்மானங்கள் வரும்போது, முதல்வர் அவர்களும் இருந்து, இந்தத் தீர்மானம் வந்திருந்தால், கொஞ்சம் சரியாக, முறையாக இருந்திருக்கும் என்பது என்னுடைய எண்ணம், என்னுடைய மனதில்படுகிறது. டாக்டர் ஆல்பன் அவர்கள் சட்டமன்ற உறுப்பினராக இருந்து நேற்றையதினம் இறந்திருக்கிறார். ஏற்கெனவே சட்டமன்ற உறுப்பினர்கள் இறந்தால் ரூ. 50,000தான் அரசாங்கத்திலிருந்து கொடுத்தீர்கள். இப்போது அதை ஒரு இலட்சமாக ஆக்கியிருக்கிறீர்கள். அவருடைய குடும்பத்திற்கு ஆதரவு கொடுக்கின்றவகையில் இதை ரூ.5 இலட்சமாக அவருடைய குடும்பத்திற்குக் கொடுத்தால் ஒரு ஆறுதலாக இருக்கும்.

*முற்பகல் 9-45*

அதுபோன்று அவருடைய குழந்தைகள் எல்லாம் Medical College-ல் படிக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் வேலைவாய்ப்பில் முன்னுரிமை கொடுத்து, அந்தப் படிப்புச் செலவுகளை எல்லாம் அரசாங்கமே ஏற்றுக்கொள்கிற அளவில் செய்தால்தான் அவருக்குச் செய்கிற ஒரு அஞ்சலியாக இருக்குமென்பதை இந்த நேரத்தில் கூறிக்கொண்டு, டாக்டர் ஆல்பன் அவர்கள் இறந்ததை முன்னிட்டு அவருடைய குடும்பத்தாருக்கும், அவருடைய இயக்கத்திற்கும் எவ்வளவுதான் ஆறுதல் சொன்னாலும், அது ஈடாகாது. இருந்தாலும் எங்களுடைய

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சார்பிலே அந்தக் குடும்பதாருக்கும், அவருடைய கட்சித் தலைமைக்கும், என்னுடைய இரங்கலைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் கொண்டு வந்த இந்த இரங்கல் தீர்மானத்தின்மீது பேசுவதற்கு உள்ளபடியே என்னுடைய வேதனையோடு, எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சியினுடைய வேதனையையும் அவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தோடு இணைத்துக்கொள்கிறேன். நீங்கள் அவையிலே சுட்டிக்காட்டிய தமிழ்மறை கூறியதுபோல, 'நேற்று இருந்தவர்கள் இன்று இல்லை என்னும் பெருமையைக் கொண்டதே இந்த உலகம்' என்ற அளவிற்கு நம்மோடு; அதுவும் எங்களோடு மிக அன்போடு, பாசத்தோடு, பரிவோடு பழகி எங்களையும் ஓர் உடன்பிறப்பாக ஏற்றுக்கொண்ட என் அருமை நண்பர் ஆல்பன் அவர்கள் இறந்த துயரை எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சி சார்பிலே மிக அனுதாபத்தோடு அணுகி, அவருடைய குடும்பத்தாருக்கு இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அவருடைய தந்தை ஒரு சிறந்த ஆசிரியராகவும், தாய் சமூக சேவகியாகவும், நாட்டு வைத்தியராகவும் இருந்து அந்தப் பகுதி மக்களிடத்திலே மிகவும் தொண்டாற்றிய ஒரு குடும்பத்திலே பிறந்தவர் இவர். தன்னுடைய மகன், மகளை எல்லாம், தாய் போன்று மருத்துவத்திலே கொண்டுவர வேண்டுமென்ற விருப்பத்தோடு அவர்களையும் மருத்துவத்திலே இணைத்து படிக்க வைத்த அந்தக் குடும்பம் இன்று நடுக்கடலிலே விட்ட, மாலுமியை இழந்த கப்பலைப் போல துடிதுடித்து தத்தளித்துக் கொண்டிருக்கிறது என்பதனை எண்ணும்போது சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேரும் மீளாத் துயரத்திலே இருக்கின்றோம். அவையிலே நம்முடைய முன்னவர் அவர்கள் கொண்டு வந்த இரங்கல் தீர்மானத்தையொட்டி நல்ல ஒரு சட்டமன்ற உறுப்பினர் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டுமென்று எவ்வளவுதான் துயரத்தோடு நாம் சொன்னாலும், அந்தக் குடும்பம் இந்தத் துயரத்திலிருந்து மீள முடியாத ஓர் இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. அவருடைய குடும்பத்திற்கு என் சார்பாகவும், சக சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பாகவும், எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாகவும், ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

***திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நாளென ஒன்றுபோல் காட்டி உயிர்ஈரும்
வாளது உணர்வார்ப் பெறின்"

என்று வள்ளுவர் சொன்னதைப்போல நேற்றையதினம் 18-3-1999 ஆம் நாள் நமது அருமைச் சகோதரர், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய குமரி மாவட்டச் செயலாளரும், திருவட்டாறு தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் ஆல்பன் அவர்கள் நம்மிடமிருந்து பிரிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற செய்தி மிகவும் வேதனைக்குரிய செய்தியாக, நெஞ்சத்தை உலுக்குகின்ற ஒரு செய்தியாக நமது காதுகளுக்கு எல்லாம் வந்து சேர்ந்திருக்கிறது. அந்த நல்லவர், அவசர நிலை போன்ற காலங்களிலே மிசா கைதியாக பல்வேறு துயரங்களையும், வேதனைகளையும் அனுபவித்துக்கொண்டு, அந்தப் பகுதி மக்களுக்காக தொண்டாற்றுகின்ற ஒரு நல்ல பண்பினைப் பெற்றிருந்தவர். அவரும், அவர் சார்ந்திருந்தவர்கள் குடும்பமும் ஒரு மருத்துவக் குடும்பமாக இருந்தும்கூட, அவர் இந்த இளம் வயதிலே இறைவனுடைய அடிகளைச் சேர்ந்த நிலையை எண்ணிப் பார்க்கும்போது நம்முடைய உள்ளங்கள் எல்லாம் வேதனையிலே வெம்புகின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

அவர்களுடைய குடும்பமும், அவர் சார்ந்திருந்த திராவிட முன்னேற்றக் கழக இயக்கமும் அன்னாருடைய மறைவால் மிகுந்த துயரத்தில் இருக்கின்றன என்பதோடு மட்டும் அல்லாமல், இன்றைக்கு, நம்முடன் சட்டமன்ற உறுப்பினராக இருந்த ஒருவர் மறைந்திருக்கின்ற இந்தச் சூழ்நிலையிலே தமிழக மக்கள் அனைவருமே மீளாத் துயரத்திலே இருந்துகொண்டிருக்கிறார்கள். அவருடைய குடும்பத்தாருக்கும், அவர் சார்ந்திருந்த இயக்கத்திற்கும், நான் சார்ந்திருக்கின்ற அகில இந்திய பார்வர்டு பிளாக் இயக்கத்தினுடைய சார்பிலே ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொண்டு, அன்னார் குடும்பத்திற்கு எந்தெந்த முறைகளிலே இந்த அரசு உதவி செய்ய முடியுமோ அதைச் செய்ய வேண்டும். அந்தப் பக்குவத்தைப் பெற்றிருக்கின்ற தலைவர்தான் கலைஞர் என்கின்ற முறையில் அன்னாருக்கு என்னுடைய வேண்டுகோளையும் வைத்து, மறைந்தவர் குடும்பத்திற்கும், அவர் சார்ந்திருந்த கழகத்திற்கும், நான் சார்ந்திருக்கின்ற அகில இந்திய பார்வர்டு பிளாக் இயக்கத்தின் சார்பிலே என்னுடைய உளப்பூர்வமான இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1999 மார்ச் 19

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். திருநாவுக்கரசு.

முற்பகல் 9-50

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் ஆல்பன் அவர்கள் சட்டமன்றம் நடக்கிறபோது, சட்டமன்றத்தில் பணியாற்ற வந்தபோது மாரடைப்பால் இயற்கை எய்தினார் என்னும் செய்தியைக் கேட்டு உண்மையிலேயே மிகுந்த அதிர்ச்சியும், துயரமும் அனைவரும் அடைகிறோம்.

சட்டமன்றத்திலே அவரை நாங்கள் பலமுறை பார்க்கும் போது ஆர்ப்பாட்டம் ஏதுமின்றி மிக எளிமையாக அன்போடு எல்லோரிடத்திலேயும் பழகக்கூடிய ஒரு இனிய பண்பாளராகத் திகழ்ந்தார். தொகுதி மக்களுக்காக, சட்டமன்றத்திலே குரல் கொடுப்பதற்காக வந்தவர் அவர்; இன்றைக்கு அவருடைய பூத உடல் மட்டும் அவருடைய தொகுதிக்கு இங்கிருந்து கொண்டு செல்லப்பட்டிருக்கிறது என்பது அவருடைய குடும்பத்தினருக்கும், அந்தத் தொகுதி மக்களுக்கும், அவரோடு பழகிய தோழர்களுக்கும் எவ்வளவு பெரிய அதிர்ச்சியைத் தந்திருக்கும் என்று நம்மாலே எண்ணிப் பார்க்க முடிகிறது. அன்னாருடைய இழப்பு பெரிய ஈடுசெய்ய முடியாத நஷ்டம் ஆகும். எனவே, அவரைப் பிரிந்து வாடுகிற அவரது குடும்பத்தினர், அவரைத் தேர்ந்தெடுத்த தொகுதி மக்கள், அவர் சார்ந்திருந்த திராவிட முன்னேற்றக் கழகம் ஆகியவற்றிற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் எம்.ஜி.ஆர். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

***திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டாக்டர் ஆல்பனுடைய மரணச் செய்தி நேற்றையதினம் சுமார் ஏழே முக்கால், எட்டு மணியளவில் என்னுடைய அறையில் காவல் துறையினுடைய ஊழியர்களால் தெரிவிக்கப்பட்டது. ஆனால், அது எனக்கு நம்புவதற்கு முடியாத ஒரு சூழ்நிலையாகத்தான் இருந்தது. ஏனென்றால், கடந்த 11ஆம் தேதியன்று நம்முடைய சட்டமன்ற மனுக்கள் குழு மாண்புமிகு திரு. முபாரக் தலைமையிலே நாகர்கோவில் வந்தபோது மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலே 10-30 மணிக்கு கூட்டத்தை ஆரம்பித்து 5-30 மணி வரையிலே இடைவேளைக்குக்கூட செல்லாமல் நடத்தி முடித்து அதன்பின் நாங்கள் எல்லோரும் ஒன்றாக உணவருந்தி, அவரோடுதான் நானும் என்னுடைய ஊருக்கு மார்த்தாண்டம் வரை



1999 மார்ச் 19] [திரு. டி. மணி]

சென்ற அந்த நினைவெல்லாம் இன்னும் இருக்கிறது. அது மாறுவதற்கு சற்று கஷ்டமான ஒரு சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

அதுமட்டுமல்ல. ஏற்கெனவே அவர் என்னுடைய ஊரில் இருக்கின்ற அரசு உயர்நிலைப் பள்ளியில் படிக்கின்ற காலத்தில், அவர் சிறுவனாக இருந்த காலத்திலேயே அவரை எனக்குத் தெரியும். அதற்குப்பின் அவர் கல்லூரி வாழ்க்கையை பெங்களூரிலே முடித்து டாக்டராக வருவதற்கு முன்னால் அரசியல் பணி என்ற முறையில் திராவிட இயக்கத்தோடு அவருக்கிருந்த பற்றுதலின் காரணமாக, அதில் இளமைப் பருவத்திலேயே இணைந்து உற்சாகத்தோடு தன்னுடைய பணியை ஆற்றிய ஒரு நண்பர்.

சமீபத்திலே கொட்டாரத்திலே நம்முடைய மாண்புமிகு பதிவுத் துறை அமைச்சர் தலைமையிலே பதிவுத் துறையினுடைய கட்டடத்தின் திறப்பு விழா ஒன்று நடந்தது. அன்றைக்குக்கூட, வந்திருந்த அதிகாரி ஒன்றைச் சொன்னார். டாக்டர் ஆல்பனுடைய தொகுதியில், அருமனையிலே ஒரு கட்டடம் வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். அதை நானும் அவர்களுக்கு வலியுறுத்தினேன். அன்றும் சொன்னார்கள், அவர் வராமல் இருந்தாலும்கூட அதை நாம் அனுமதித்துத்தான் ஆகவேண்டும் என்று. அப்படிப் பொதுவாக அந்தத் தொகுதி மக்களுடைய நல்ல காரியங்களுக்கு மட்டுமல்ல, மாவட்டத்தினுடைய வளர்ச்சிக்கு அதிலே கேந்திரமான இரண்டு கோஷங்கள், ஒன்று ரப்பர் தொழிற்சாலை, இரண்டு, மருத்துவக் கல்லூரி. இதிலே முனைப்பாக தன்னுடைய கருத்தை, தன்னுடைய கட்சிக்கும் எடுத்துச் சொல்லி அவற்றை எப்படியாவது பெற்றுத் தருவதிலே ஒரு பெருமுயற்சியில் ஈடுபட்டு வந்தார் டாக்டர் ஆல்பன் அவர்கள்.

முற்பகல் 9-55

அதோடு சமீபத்தில் நடந்த தேர்தல்—கடந்த நாடாளுமன்றத் தேர்தல் எங்களுடைய நாகர்கோவில் தொகுதியைப் பொறுத்தமட்டில் ஒரு பெரிய பிரச்சினையான தேர்தலாக இருந்தது. அந்தக் காலகட்டத்திலே அவரோடு இணைந்து செயல்பட வேண்டிய ஒரு சூழ்நிலை எங்களுக்கு உருவாகி, அந்தபட்சத்திலே மாவட்டம் பூராவிலும் அவருடைய கட்சியினுடைய ஊழியர்களுக்கெல்லாம் எப்படிக் கட்டளைகளைப் பிறப்பிக்க வேண்டுமோ அந்த வகையிலே உரிய கட்டளைகளை எல்லாம் பிறப்பித்து அந்தத் தேர்தல் பணியை திறமையாகச் செய்த

ஒரு நல்லவர் என்ற முறையில் சாதாரணமாக தொகுதி மக்கள் மத்தியிலே பாராட்டைப் பெற்றிருக்கின்ற அவர், பழகுவதிலே இனிமையாகப் பழகுகின்ற தன்மையுடன் உள்ள ஒரு நபரை, நம்முடைய சட்டமன்ற உறுப்பினரை நாம் இழந்திருக்கின்றோம்.

ஏற்கெனவே அவருடைய குடும்பத்தைப் பற்றி எனக்கு முன்பு பேசிய டாக்டர் மோசஸ் அவர்கள் தெளிவாக இங்கே எடுத்துரைத்திருக்கின்றார்கள். சாதாரணமாக, என்னுடைய ஊருக்கும் அவருடைய ஊருக்கும் மூன்று மைல்கள்தான் வித்தியாசம் உண்டு. பழைய காலத்திலே சொல்வார்கள், அது ஒரு வைத்திய குடும்பம் என்று. வர்ம சிகிச்சையிலே தேர்ச்சி பெற்றவர்கள் என்று சொன்னால், அதிலே ஒரு பழமொழியைச் சொல்வார்கள். யானை ஒருவனை சவிட்டி, கால் உடைந்தால், அந்த முடத்தைக் கட்டுவதற்கு அவருடைய தாயார் சிறந்ததொரு வைத்தியப் பணியைச் செய்து வந்தார் என்று பாராட்டோடு கூறுவார்கள். வைத்தியத் துறையிலும் அப்படியொரு பெயர் பெற்ற ஒரு குடும்பத்தைச் சார்ந்தவர் டாக்டர் ஆல்பன் அவர்கள். அவருடைய மறைவு என்பது அவருடைய குடும்பத்திற்கு எந்த அளவிற்கு இழப்பை ஏற்படுத்தியிருக்கின்றது என்பது ஒரு பக்கத்திலே இருந்தாலும், அதைவிட கடினமான ஒரு தாக்குதலுக்கு ஆளாக்கப்பட்டு இருப்பது அவர் சார்ந்த இயக்கமான திராவிட முன்னேற்றக் கழகம்தான். அந்த இயக்கத்திற்கு இது ஒரு பேரிழப்பு. அவர் இரண்டு முறை திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மாவட்டச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். அந்தப் பொறுப்பில் அவர் எவ்வளவு பொறுப்பாகச் செயல்பட்டு வந்தார் என்பது அவர் இரண்டாவது முறையாக தேர்ந்தெடுக்கப் பட்டிருப்பதிலிருந்து தெரிகிறது.

அந்த வகையிலே, அந்த இழப்பு என்பது அந்த இயக்கத்திற்கு ஒரு கடினமான இழப்பு என்று நான் கருதுகின்றேன். ஆகவே, அவரை இழந்து தவிக்கின்ற அன்னாருடைய குடும்பத்திற்கு மார்க்சீய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே ஆழ்ந்த இரங்கலைக் கூறி, அவர் சார்ந்த இயக்கத்திற்கும் எங்களுடைய இயக்கத்தின் சார்பிலே இரங்கலைச் சொல்லி முடிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி.

**THIRU B. VENKATASAMY:** Hon. Speaker Sir, I associate myself with the resolution moved by the Leader of the House, the Hon. Minister for



Education on the demise of Dr.V. Alban, M.L.A. who was my dearest friend and neighbour in the M.L.A.s' hostel. I am staying in the Old Hostel in Room No.33 and he was staying in Room No.34. Yesterday early morning at 6.15 a.m., one of my sons who is with me went to his room to meet his son. Both of them are friends. He observed that Dr. Alban was coughing. It seems that my son told him to go to the Hospital, but he replied that it was not necessary. Then my son said to me, 'uncle is very serious, you Please come and tell him to go to the hospital'. Then I rushed to his room and requested him to go to the hospital. At that time he was semi-conscious and was wearing a lungi. Then he wore a pant but he could not put on the belt. I gave him a shirt and asked his son to take him to the hospital saying that I will come within ten minutes. I came to know that when he was moving to the hospital he collapsed near Spencer. It is really a very sad thing. As told by the A.I.A.D.M.K. Member, it is better to give very good medical facilities to the M.L.A.s who are staying in the M.L.As' hostel. Had he been moved earlier to the hospital, he would have been saved. That is what I feel.

Really it is great loss to me as a friend. Whenever I go to his room he used to smile. He always receive people with a smiling face. அவருடைய அறை எப்போதும் ஒரே கும்பலாக இருக்கும். He was doing a lot of service to the people. It is a great loss to Kanyakumari District and loss to the party also. I wholeheartedly convey my condolences to his bereaved family members. His children also have to be taken care of. I know his son. He is studying here. I think the Government will help him. I share the condoling remarks of others in the House to the bereaved family.

*முற்பகல் 10-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவட்டாறு சட்டமன்ற உறுப்பினரும், டாக்டருமான ஆல்பன் அவர்களின் மரணச் செய்தி கேட்டு மிக்க துயரம் அடைந்தேன். மருத்துவக் குடும்பத்திலே பிறந்து, மருத்துவராகி, அடிமட்டத் தொண்டராக ஓர் இயக்கத்திலே நுழைந்து மாவட்டச் செயலாளர் வரையிலும் வளர்ந்து, பொது வாழ்க்கைக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர் அவர். அவருடைய இழப்பு அவருடைய குடும்பத்திற்கு மட்டுமல்ல; அவர் சார்ந்திருக்கக்கூடிய இயக்கத்திற்கு மட்டுமல்ல; ஒட்டுமொத்தமான அந்தச் சமுதாயத்திற்கே ஒரு பேரிழப்பாகும். அவரது

இழப்பால் வாடும் அவரது குடும்பத்தாருக்கும், அவருடைய தோழர்களுக்கும், இயக்கத்திற்கும் புதிய தமிழகத்தினுடைய சார்பாக மனமார்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அவரது இழப்பால் வாடும் அவருடைய குடும்பத்தாருக்குத் தமிழக அரசு தாராளமாக நிதியுதவி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, விடைபெறுகிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த இரங்கல் தீர்மானத்திலே எங்களுடைய தமிழ்ப் பாட்டாளி மக்கள் கழகத்தின் சார்பிலே, மறைந்த மருத்துவர் ஆல்பன் அவர்களுக்கு எங்களுடைய ஆழ்ந்த இரங்கலையும் வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம். பழகுவதற்கு இனிய பண்பாளராகவும், மென்மையான அன்பாளராகவும் திகழ்ந்தவர். யாரிடமும் அதிர்ந்து பேசாத அந்த அளவிற்கு ஒரு மென்மையான உள்ளத்தைக் கொண்டவர். அப்படிப்பட்டவர் மிகச் சாதாரணமான ஒரு நிலையிலேயிருந்து பொதுத் தொண்டிலே தன்னை உயர்த்திக் கொண்டவர். படிக்கின்ற காலந்தொட்டு, மொழி, இன உணர்விலே ஏற்றதொரு இயக்கமாக, தான் கருதிய திராவிட முன்னேற்றக் கழகத்திலே தன்னை இணைத்துக் கொண்டு, படிப்படியாக உயர்ந்தவர். கிளைக் கழகச் செயலாளரிலேயிருந்து, மாவட்டக் கழகம் வரையிலே, அதேபோல பொது வாழ்விலே ஊராட்சி மன்றத் தலைவரிலேயிருந்து சட்டமன்ற உறுப்பினர் என்ற வகையிலே, இன்னும் பல்வேறு வகைகளிலே அந்த மக்களுக்காகத் தொண்டு செய்தவர்.

இன்றைக்கு அவரை இழந்து வாடுகின்ற அவருடைய குடும்பத்தாருக்கும், அந்தத் தொகுதி வாழ் மக்களுக்கும், அவர் சார்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத் தலைமைக்கும் எங்களுடைய தமிழ்ப் பாட்டாளி மக்கள் கழகத்தின் சார்பிலே ஆழ்ந்த இரங்கலையும், வருத்தத்தையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டாக்டர் ஆல்பன் அவர்களுடைய எதிர்பாராத



மறைவு குறித்து இங்கே கொண்டுவரப்பட்ட இரங்கல் தீர்மானத்தின்மீது அனைத்துக் கட்சித் தலைவர்களும், உறுப்பினர்களும் தங்களுடைய ஆழ்ந்த இரங்கலையும், டாக்டர் ஆல்பன் அவர்கள் எப்படிப்பட்ட பண்பாளராக விளங்கினார் என்ற விவரத்தையும் எடுத்துரைத்திருக்கிறார்கள்.

டாக்டர் ஆல்பன் அவர்கள் மாணவப் பருவத்திலேயிருந்து திராவிட இயக்க உணர்வு கொண்டவராக, பேரறிஞர் அண்ணா அவர்களிடத்தில் பெருமதிப்பு கொண்டவராக கலைஞருடைய தலைமையில் சமூகத்திற்குச் சிறந்த தொண்டாற்ற முடியும் என்ற உறுதியோடு செயல்பட்டவர்கள்.

*முற்பகல் 10-05*

1976 ஆம் ஆண்டு 'மிசா' கைதியாக ஓராண்டுக் காலம் அவர் சிறையில் அடைக்கப்பட்ட அந்தக் காலத்திலேயும் சிறையிலிருந்து மீள முடியாது என்ற அச்சுறுத்தல் வேறு சிலரால் அவருக்கு ஏற்பட்டபோதும், நம்முடைய டாக்டர் மோசஸ் அவர்கள் பேசுகிறபோது சொன்னதைப்போல, கொள்கையிலிருந்து, இயக்கத்திலிருந்து இம்மியளவும் விலகாத உறுதி படைத்தவராக இருந்தவர்கள். இயல்பிலேயே அவர்கள் தொண்டு செய்கிற ஓர் இயல்பான ஆர்வத்தை வளர்த்துக்கொண்டவர்கள். ஏழை எளிய மக்களுக்குத் தொண்டு செய்வதிலே ஒரு தனி மகிழ்ச்சியைப் பெற்றவர். அவருடைய அருமை அன்னையார் அவர்கள் சித்த மருத்துவத் தொடர்புடைய எலும்பு முறிவு சிகிச்சையிலே ஆற்றல் பெற்றவராக இருந்து அந்த வட்டாரத்தில் பலருக்குச் சிகிச்சை வழங்கி அவர்களுடைய நன்மதிப்பைப் பெற்றவராக இருந்து வந்த அந்தச் சூழ்நிலையில், நம்முடைய டாக்டர் ஆல்பன் அவர்களும், தம்முடைய மருத்துவமனையில் - டாக்டர் ஆல்பன் மருத்துவமனை என்றே விளங்குகிற அந்த மருத்துவமனையில்-கையிலே காசு இல்லாமல் வரக்கூடிய ஏழைகளுக்குக்கூட, அவர்கள் தரவேண்டிய கட்டணத்தைப் பற்றி எதிர்பார்க்காமல், அல்லது வேண்டி வலியுறுத்தாமல், இலவச சிகிச்சை வழங்கக்கூடிய அளவுக்குப் பெருந்தன்மை உடையவர். இந்த இயக்கத்தில் அவர் தொடக்கத்தில் ஊராட்சி மன்றத் தலைவராக, பின்னர் ஊராட்சி ஒன்றியத்தினுடைய தலைவராகச் செயல்பட்டு, அந்த வட்டாரத்திற்கு மிக நெருக்கமானவராக வளர்ந்தவர். குறிப்பாக, கழகத்தின் மாவட்டப் பொறுப்பாளராக ஆனதிலிருந்து கடந்த 10 ஆண்டு காலமாக, மாவட்டம் முழுவதும் எல்லாவகையிலும் எல்லாவிதமான மக்களுடைய பணிகளுக்கும் தன்னை ஒப்படைத்துக்கொண்டு, தன்னுடைய உடல் நலத்தைக்கூட அதிகம்

கவனிக்காமல் அலட்சியம் செய்யக்கூடிய அளவுக்குக் கழகப் பணிகளில் ஆர்வம் காட்டியவர். அவர்களுக்கு இதற்கு முன்னாலே இரண்டு முறை இருதய நோய் ஏற்பட்டிருக்கின்றது. சில சமயங்களில் எங்களோடு சுற்றுப் பயணம் செய்கிறபோது - நம்முடைய மணி அவர்கள் பேசுகிறபோது சொன்னதைப் போல - அவருடைய உணவைப் பற்றியும் அவர் கவலைப்படாமல் சுற்றுப் பயணத்திலே ஈடுபட்டவர். ஒன்றிரண்டு முறை அவருடைய உடல் நலத்தைப் பேணிக்கொள்ள வேண்டுமென்று, என்னைப் போன்றவர்கள் சொன்னபோதுகூட, உடம்பு தானாகச் சரியாகிவிடும், அதை என்ன பேணுவது என்று அலட்சியப்படுத்துகிற அல்லது அதைப் பற்றி அதிகம் கவனிக்க விரும்பாத ஓர் எண்ணத்தை அவர்கள் வெளியிடுவார்கள். அவரே ஒரு மருத்துவர். நல்ல டாக்டர். அவருக்கு தன்னுடைய உடல்நிலையைப் பற்றி ஓரளவுக்குத் தெரியும். இருந்தாலும் இரண்டு முறை இருதய நோய்க்கு ஆளானவர், சற்று எச்சரிக்கையாக தன்னுடைய உடல் நலனைப் பாதுகாக்க வேண்டுமென்று கவலைப்படாத ஒரு மனப்பான்மையை வளர்த்துக்கொண்டு, இந்த முறை சட்டமன்றத்திற்கு வருகிறபோதுகூட கன்னியாகுமரியிலிருந்து பஸ்சிலேதான் பயணம் செய்து இங்கே வந்தார் என்பதை நாங்கள் அறிந்தபோது, உள்ளபடியே எந்த அளவுக்கு ஒரு கொள்கையிலே அல்லது ஒரு இயக்கத்திலே தனக்கு பற்று இருக்கிறதோ அதற்கு நேர்மாறாக தன்னைப் பற்றி அலட்சியமாகக் கருதுகின்ற ஒரு மனப்போக்கு அவரிடத்திலே இருந்ததனுடைய விளைவாக எதிர்பாராத இந்த நிலைமை ஏற்பட்டுவிட்டது என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

நல்லவேளையாக அவர்கள் சட்டமன்ற உறுப்பினர் விடுதியில் இருந்தபோது அன்று காலையில் அவருக்கு இருமல் வந்தபோது, சட்டமன்ற உறுப்பினர் வெங்கடசாமி அவர்கள் பக்கத்தில் இருந்து ஏறத்தாழ மருத்துவமனைக்கும் அவரை அழைத்துக்கொண்டு போகிற கடமையில் ஈடுபட்டு, உடனடியாக மருத்துவர்கள் அவரைக் கவனிக்கக்கூடிய வாய்ப்பும் உருவாக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் அந்த இருதய நோய் என்பது எவ்வளவு கொடுமையானது என்பதை, அதிகத் தொல்லை கொடுக்காமல் ஆளை அழைத்துக்கொண்டு போய்விடுகிற ஒரு நோயாக இருக்கிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. அந்த நிலைக்கு அவர்கள் ஆளாகிவிட்டார்கள். குறிப்பாக, அவர்கள் தன்னுடைய கட்சியிலே எவ்வளவு பற்றுடையவராக இருந்தாலும், அனைத்துக் கட்சி நண்பர்களிடத்திலேயும் பழகுவதற்கு



இனியவராக - கொள்கை வேறுபாடு ஆயிரம் இருந்தாலும் மனிதப் பண்போடு, நல்ல எண்ணத்தோடு பழகுகிற ஓர் இயல்பை வளர்த்துக் கொண்டவராக இருந்தார். கட்சித் தோழர்களேகூடச் சில நேரங்களிலே அவருடைய ஆணையை நிறைவேற்றாவிட்டால், நிறைவேற்றவில்லை என்று சொல்வாரே தவிர, அதற்காகக் கோபித்துக்கொள்ளமாட்டார். இரண்டே இரண்டு தடவைகள் கேட்பார். மூன்றாவது தடவை அவர்களைக் கேட்கமாட்டார். அவன் நிலை அது என்று கருதிக் கொள்கிற ஓர் இயல்பை உடையவர். எனவே அப்படிப்பட்ட நல்ல பண்பாளரை அனைவருடைய பாராட்டுக்கும் உரியவராக இருந்த ஒருவரை நாம் இழக்க நேரிட்டுவிட்டது மிகுந்த வருத்தத்தை அளிப்பது. எல்லா உறுப்பினர்களும் அந்த ஆழ்ந்த வேதனையில் இருக்கிறார்கள் என்பதை நான் அறிவேன்.

முற்பகல் 10-10

அவருடைய குடும்பம் - அவரும், அவருடைய மனைவி, குழந்தைகள், அவருடைய பெற்றோர் - ஒரு Missionary உணர்வு பெற்றவர்கள். அவருடைய பெற்றோர் - ஒரு Missionary உணர்வு பெற்றவர்கள். சமூகத் தொண்டாற்றுவதிலே, தொண்டுக்குத்தான் ஒரு மிக முக்கியமான இடம் இருப்பதாக உணர்ந்து மற்றவர்களிடத்திலே அந்த உணர்வோடு செயல்பட்டவர்கள். சமய நல்லிணக்கம், ஜாதி வேறுபாடற்ற உணர்வு இவற்றை வளர்த்துக் கொண்டவர். சிறுபான்மைச் சமூகத்திற்கு மிகப்பெரிய நம்பிக்கைக்குரியவராக விளங்கியவர். அவருடைய இழப்பால் நேற்றையதினம் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் மிகுந்த வேதனைக்கு ஆளாகி, அவர் மறைந்த செய்தி கேட்டு சென்று பார்த்துவிட்டு வந்துகூட, எளிதாகத் தன்னைத் தேற்றிக்கொள்ள முடியாதவராகத்தான் இருந்தார்கள்.

இன்றைக்கும்கூட அவருடைய உடல் திருவட்டாறில் உள்ள அவருடைய மருத்துவமனையில் கொண்டுபோய் வைக்கப்பட்டு, அங்கே அஞ்சலி செலுத்தப்பட்டு, பின்னர்தான் அடக்கமாக இருக்கிறது. நம்முடைய அரசின் சார்பில் கழகத்தினுடைய பொருளாளரும், நல்வாழ்வுத் துறை அமைச்சருமான ஆற்காடு வீராசாமி அவர்களும் குமரி மாவட்ட அமைச்சரான சுரேஷ் ராசன் அவர்களும் அங்கே சென்றிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு முதல்வர் சார்பாகவும்கூட இரங்கல் உணர்வோடு அங்கே அஞ்சலி செலுத்தப்படுகிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். அவருடைய குடும்பம், பொருளாதாரத் துறையிலே நலிந்துவிட்ட ஒரு குடும்பம் அல்ல. எல்லா வகையிலேயும் மனத்தெம்போடு இருக்கக்கூடிய ஒரு குடும்பம். இந்த இழப்புதான்

[பேராசிரியர் க. அன்பழகன்] 1999 மார்ச் 19]

பேரிழப்பு. இது ஈடுசெய்ய முடியாத இழப்பு. அவர்களுடைய உணர்வுகள் எல்லாம் மங்கி மடிந்து போகிற அளவுக்கு அவர்களை ஆளாக்கிவிடக்கூடிய ஓர் இழப்பு. இதை எந்த வகையிலேயும் ஈடுசெய்ய முடியாது. அவர்களுடைய துயரத்தில் நாமெல்லாம் பங்கு கொள்கிறோம் என்பது அவர்களுக்கு ஒரு சிறு அளவேனும் ஆறுதல் அளிக்கும் என்ற நம்பிக்கையோடு, கழகத் தோழர்களுக்கும், அனைத்துக் கட்சி நண்பர்களுக்கும், குமரி மாவட்ட மக்களுக்கும், திருவட்டாறு தொகுதி மக்களுக்கும், தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் சார்பாகவும், என் சார்பாகவும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களும், பேரவையின் அனைத்துக் கட்சித் தலைவர்களும் தெரிவித்திருக்கின்ற இரங்கலோடு என்னுடைய இரங்கலையும் இணைத்துக்கொள்கிறேன். காரணம், டாக்டர் ஆல்பன் அவர்கள் 30 ஆண்டு காலமாக எனக்கு மிகவும் நெருக்கமான நண்பர்.

இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றும் முகத்தான் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று சிறிது நேரம் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மறைந்தவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று ஒரு மணித்துளி அமைதி காத்ததன் மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.)

மறைந்த சட்டமன்ற உறுப்பினருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் ஒத்திவைக்கப்படுகின்றன. பேரவை மீண்டும் நாளை (20-3-1999) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை முற்பகல் 10-13 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 2. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

69. சித்த மருந்துகள் விற்பனை தொடர்பாக எந்தவொரு வணிகரும் 1959ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள் துறையின் 17-03-1999ஆம் நாளிட்ட 58ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]



1999 மார்ச் 19]

70. 1959ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டத்தின் முதலாவது விவர அட்டவணையில் சில திருத்தங்கள் செய்தது குறித்து வணிக வரிகள் துறையின் 17-03-1999 ஆம் நாளிட்ட 59ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

71. 07-04-1998ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பரசிதழில் வெளியிடப்பட்ட வணிக வரிகள் மற்றும் அறநிலையத் துறையின் II(1)வ.வ.அ.நி/43(டி-2)98ஆம் எண் அறிவிக்கையில் திருத்தம் செய்தது குறித்து வணிகவரிகள் துறையின் 17-03-1999ஆம் நாளிட்ட 60ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது]

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

15. 1999-2000 ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 1 முதல் 61 வரையிலான விரிவான மானியக் கோரிக்கைகள் (61 புத்தகங்கள்).

16. 1999-2000 ஆண்டிற்கான கடன் செலவுகள் குறித்த மானியக் கோரிக்கை.

17. 1999-2000 ஆண்டிற்கான பொதுக் கடன் - திருப்பிச் செலுத்தல் குறித்த விரிவான மானியக் கோரிக்கை.

18. 1999-2000 ஆண்டிற்கான கோரிக்கை எண் 36 - பொதுப் பணிகள் - கட்டடங்கள் குறித்த விவரங்கள் (ஆங்கிலம்).

19. 1999-2000 ஆண்டிற்கான கோரிக்கை எண் 38 - சாலைகள், பாலங்கள் பணிகள் குறித்த விவரங்கள் (ஆங்கிலம்).

20. 1999-2000 ஆண்டிற்கான கோரிக்கை எண் 55 - பொதுப் பணிகள் - கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு மற்றும் பணிகள் குறித்த விவரங்கள் (ஆங்கிலம்).

21. 1999-2000 ஆண்டிற்கான கோரிக்கை எண் 56 - சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு மற்றும் பணிகள் குறித்த விவரங்கள் (ஆங்கிலம்).

22. 1999-2000 ஆண்டின் வருவாய் குறித்த விரிவான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள்.

23. 1999-2000 ஆண்டிற்கான ஆண்டு நிதிநிலை அறிக்கை.

24. 1999-2000 ஆண்டிற்கான நிதிநிலைக் குறிப்பு (பகுதி-1).

25. 1999-2000 ஆண்டிற்கான நிதிநிலைக் குறிப்பு (பகுதி-2).

26. 1999-2000 ஆண்டிற்கான நிதிநிலைக் குறிப்பின் இணைப்புகள்.

27. 1999-2000 ஆண்டின் திட்டம் (திட்டம் வரவு-செலவுத் திட்ட இணைப்பு) 1999-2000 ஆண்டின் விரிவான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளின் துணை வெளியீடு.

28. 1999-2000 ஆண்டின் வரவு-செலவுத் திட்ட உரையின் இணைப்புகள்.

29. 1999-2000 ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட விளக்க நூல் (தமிழ், ஆங்கிலம்).

30. பதவிகள், சம்பள வீதங்கள் பற்றிய விவர அறிக்கை—1999-2000 (ஆங்கிலம்).

31. 1999-2000 ஆண்டின் செலவுக்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு (தமிழ், ஆங்கிலம்).

32. 1999-2000 ஆண்டின் நிதிநிலை அறிக்கை குறித்து மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதல் அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை (தமிழ், ஆங்கிலம்).

33. 07-04-1998 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பரசிதழில் வெளியிடப்பட்ட வணிக வரிகள் மற்றும் அறநிலையத் துறையின் II(1)/வ.வ.அ.நி./43(d-7)/98ஆம் எண் அறிவிக்கையில் திருத்தம் செய்தது குறித்து வணிக வரிகள் துறையின் 17-03-1999ஆம் நாளிட்ட 61ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

22107

அரசு மைய அச்சகம், சென்னை-600 079.

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
816, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280
and 283 of the Tamil Nadu
Legislative Assembly Rules and
printed by the Director of
Stationery and Printing,
Chennai-600 002.